www.kalvikural.com

No. of Printed Pages : 7

4819723 4661

பதிவு எண் 849920

# பகுதி I – தமிழ் – இரண்டாம் தாள்

(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம்பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

# Language – Part I – TAMIL – Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளின் மிகாது விடை எழுதுக. 3x4=12

1. தமிழ் மொழியின் மீது பற்றுக் கொள்ளாத தமிழ் மக்களைப் பரிதிமாற்கலைஞர் கடிந்துரைப்பது யாங்ஙனம்?

2. சாதிக் கொடுமை, சமயவெறி முதலியன சமரச உணர்வைக் குலைப்பனவாம் - இக்கருத்தை திரு.வி.க. வழி நின்று ஆய்க.

3. கவிதைக்குரிய நல்லியல்புகளைக் கம்பன் உரைக்குமாறு யாங்ஙனம்?

4. ஈகைப்பண்பில் தமிழ்மக்கள் சிறந்து விளங்கிய தன்மையை விளக்குக.

5. நமது நாட்டில் நீண்டகாலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை என்று திரு.வி.க வருந்தி உரைப்பனவற்றை எழுதுக.

[ திருப்புக

www.kalvikural.com

www.kalvikural.com



II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விடை எழுதுக. ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளின் மிகாது விடை எழுதுக. 3x4=12

6. அறுமுறை வாழ்த்து - விளக்குக.

7. நீதி நூல்களின் பொதுவான இயல்பினைக் குறித்து எழுதுக.

8. ஒரு படி முன்னேற்றம் என்று மு.வ. உரைப்பது யாது?

9. இலக்கியங்களில் காணப்படும் கட்டடக் கலைச் செய்திகளைக் கூறுக.

10. மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை?

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் **இருபது** வரிகளின் மிகாது விடை எழுதுக. 1x6=6

11. இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் வகைமை குறித்துப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

12. மனித வாழ்வே பெரியது என்னும் அடிப்படையில் மு.வ. உரைக்கும் எதிர்காலக் கனவு யாது?

IV. பின்வரும் வினாக்கள் **ஒவ்வொன்றிற்கும் இரண்டு** பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக. 2x10=20

13. 'பால்வண்ணம் பிள்ளை' அல்லது 'கிழிசல்' என்னும் சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

அல்லது

'சட்டை' அல்லது 'ஓர் உல்லாசப்பயணம்' என்னும் சிறுகதையில் இடம் பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

www.kalvikural.com

www.kalvikural.com



14. 'மண்' அல்லது 'பழிக்குப்பழி' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதை மாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

**அல்லது**

சொந்த வீடு கட்டிக்கொள்ளக் கடன் வாங்கி அல்லற்பட்ட இருவர் சந்தித்து உரையாடுவது போல் நும் கற்பனையிலிருந்து ஒரு கட்டுரை வரைக.

**அல்லது**

நேர்மை தவறாத மாணிக்கம் அந்தப் பண்பில் தவறாது வாழ்க்கையில் பாடுபட்டு உயர்ந்ததாக ஒரு கதை எழுதுக.

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1x10=10

மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா !
பங்கயக் கைந்நலம் பார்த்தல்லவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளருதம்மா !

அல்லும் பகலும் உழைப்பவர் - உள்ளத்து
அன்பு ததும்பி எழுபவராவர்?
கல்லும் கனியக் கசிந்துருகி தெய்வக்
கற்பனை வேண்டித் தொழுபவராவர்?

அன்பினுக் காகவே வாழ்பவர் அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவராவர்?
இன்ப உரைகள் தருபவர் - வீட்டை
இன்கை யாலொளி செய்பவராவர்?

- கவிமணி

[ திருப்புக

www.kalvikural.com

www.kalvikural.com



குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன. 3x2=6

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக.

16. Art is long and life is short.

17. Truth alone triumphs.

18. United we stand, divided we fall

19. To err is human, to forgive is divine.

20. To the good people, world appears good.

21. Read the Instruction carefully before you begin to answer the questions.

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் **ஒன்றினை** விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து (**பத்து வரிகளில்**) எழுதுக. 1x4=4

(அ) "பழகப் பழகப் பாலும் புளிக்கும்"

(ஆ) "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"ச்

(இ) "ஆபத்திற்கு பாவமில்லை"

அல்லது

'அருவி' அல்லது 'வாய்மை' என்னும் தலைப்பில் சொந்த படைப்பாக கவிதை ஒன்றினை எட்டு அடிகளுக்குக் குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5x2=10

**VI** மற்றும் **VII** -ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் ஏற்ற விடையை எழுதுக.

www.kalvikural.com

www.kalvikural.com



கடந்த ஒரு நூற்றாண்டில் கல்வியின் பயன் கற்கும் மக்கள் தொகை, அதன் முக்கியத்துவம் ஆகியவற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. 150 ஆண்டுகளுக்கு முன்பு வரை கூட கல்வி ஓர் அணியாக, அலங்காரப் பொருளாகப் பண்பாட்டிற்கும், சமய ஒழுக்கம் உணர்வுகட்கும் உறைவிடமாக இருந்ததேயன்றி மனிதனின் உணவு, உடை, உறைவிடம் ஆகிய அன்றாடத் தேவைகளைத் தீர்க்கும் கருவியாகவோ, அதற்குத் தேவையான ஒரு பொருளாகவோ இருக்கவில்லை. பொருளாதார வளர்ச்சி பெரும்பாலும் உடலுழைப்பின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அதாவது 1900-இல் அமெரிக்காவில் இருபது பேரை எடுத்துக்கொண்டால் அவர்களில் பதினெட்டு பேர் உழைப்பாளிகள். இருவர் தாங்கள் கற்ற கல்வியின் அடிப்படையில் அலுவல் பார்த்தவர்கள். ஆனால் அதே நாட்டில் 1965 -இல் நிலைமை கணிசமாக மாறிவிட்டது. இந்த இருபது பேரில் பதினைந்து பேர் முறையாகக் கற்ற கல்வியின் அடிப்படையில் பெற்ற பயிற்சியைக் கொண்டு தொழில் செய்பவர்கள். ஐவர் மட்டுமே உடல் உழைப்பாளிகள்.

அந்த ஐவரில் ஒருவர் மட்டுமே உழவு செய்பவர். பொதுவாக கல்வி ஓர் அலங்காரப் பொருளாக, பண்பாட்டுச் சின்னமாக இருந்த நிலை மாறி, ஒரு சமுதாயத்தின் வாழ்விற்கு, அன்றாடத் தேவைகட்கு இன்றியமையாது வேண்டப்படும் ஒரு கருவியாக மாறிவிட்டது.

**வினாக்கள்**

16. நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு கல்வி எப்படி இருந்தது?

17. பொருளாதார வளர்ச்சி பெரும்பாலும் எதன் அடிப்படையில் அமைந்திருந்தது?

18. 1900 - இல் அமெரிக்காவில், கற்ற கல்வியின் அடிப்படையில் பணிபுரிந்தவர்கள் எத்தனை பேர்?

19. 1965 -ல் அமெரிக்காவில் முறையாகக் கற்ற கல்வி அடிப்படையில் தொழில் செய்தவர்கள் எத்தனை பேர்?

[ திருப்புக

www.kalvikural.com

www.kalvikural.com



20. உடல் உழைப்பாளிகள் எத்தனை பேர்?

21. உடல் உழைப்பாளிகளுள் உழவு செய்பவர் எத்தனை பேர்?

22. கல்வியின் இன்றைய நிலை என்ன?

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. 10x1=10

23. அவர்தான் கூறினார் இவர்தான் கூறினார் என்று பாராது எவர்தான் கூறினாலும் மெய்ப்பொருள் காண்க.

(வாக்கியப் பிழையைத் திருத்துக)

24. இந்த ஓவியத்தில் அமைந்த வண்ண செறிவும் ஓவிய பொலிவும் நம்மை கவர்கின்றன.

(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக)

25. பாஞ்சாலிக் கண்ணனைப் பார்த்து கண்ணாக் காப்பாய் என்றுக் கூறினாள்.

(தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக)

26. வேலனுக்கு பாஸ்போர்ட் கிடைத்தது. ஆனால் விசா கிடைக்கவில்லை.

(அலுவலகக் கலைச் சொற்களைத் தமிழாக்கம் செய்க)

27. தோட்டத்தில் வாழைச் செடியும் மாஞ்செடியும் நட்டனர்.

(மரபு வழுவுச் சொற்களை நீக்கி எழுதுக)

28. பீக்கங்காயும், பாவக்காயும் தின்னத் தெவிட்டுது.

(கொச்சைச் சொற்களைத் திருத்துதல்)

www.kalvikural.com

www.kalvikural.com



29. ஒலி - ஒளி அல்லது அரண் - அரன்.

( பொருள் வேறுபாட்டை உணர்ந்து அதனைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக.)

30. ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதருக்கு கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

(வடசொற் கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக)

31. ஏறிகளில் மலைநீர் சேமித்தாள் கிணருகளில் நீர்வற்றாது .

(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக)

32. கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள் என இடைக்காடனார் கூறினார் போலும்

(பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டெழுதுக)

- o 0 o -

www.kalvikural.com